

— தமயந்தி.

# சூரியனைத் தின்றவர்கள்

## சமர்ப்பணம்

மனிதத்தை நேசித்ததால் மரணப்பரிசு பெற்றுக்கொண்ட மனிதன் விமலேஸ்வரனுக்கும், இருட்டு மேகத்துள் அடைபட்டுப்போகமறுத்து தன்னையே மாய்த்துக்கொண்ட சிவரமணிக்கும் கண்ணீரோடு சமர்ப்பணம்.

-தமயந்தி-

(விமர்சனத்திற்கான வெளியீடு)

05-11-92இற்குமுன் விமர்சனங்களை அனுப்பவும்

# எம்மிடமிருந்து தொலைந்தவர்கள் நினைவாக

நமது சூரியன்
உங்களோடுதான் மரணித்தது.

நீங்கள் வருக
உங்களோடு
நமது சூரியனும் எழுக.

நமது
சூரியன் வருக.
சூரியனோடு
நீங்களும் எழுக.

காத்திருப்பு
காலத்தின் பணிப்புக்காக.
தானாகத்
திறபடாத படிக்கு
உங்கள் கல்லறையின்
வாயிற் கற்கள்.
காவலிற் தூதர்கள்.
நாங்கள் திறப்போம்
காலம் பணித்ததென்று
கல்லறையின் வாசலை.
நீங்கள் வருக.
உங்களோடு
நமது சூரியனும் எழுக.

மக்களின் மௌனங்களுக்கெல்லாம்
ஓர்
கல்லறை கட்டப்பட்ட பின்
உங்கள் கல்லறைகள்
திறக்கப்படும்
மௌனம் தொலைத்த
மக்கள் திரளால்.

அதிகாலை ஆரவாரம்
அவற்றிடை பூபாளம்
நமது சூரியன்
ஒளி கொண்டு வருக -
சூரியனோடு
நீங்களும் எழுக.

ஒளியைப் பறித்து
இருளைத் தந்தவர்
ஓடி மறைவர்.
ஓடும் குதிகளில்
ஒட்டிச் செல்லும்/ எமது மண்ணையும்
மௌனம் தொலைத்த
மக்கள் பறிப்பர்.

மண்ணில் இருந்து
விண்ணைத் தொடவும்
விலங்கற்ற காற்றில்
உயரும் நமது
தேசத்தின் பாடல்

[சுமைகள், வைகாசி, ஆனி - 1992]

# கூழ்முட்டை ஓவியம்

பல வர்ணங்கள்
பல வடிவங்கள்
நிறைய தலைகள்
நிறையவே கை, கால்கள்.

நாங்கள்
வரைந்த ஓவியம்
புதினமானதும், நூதனமானதும்;
நவீனமானதும் கூட.

சிரமப்பட்டு
மிக மிகச் சிரமப்பட்டு
ஓவியம் வரைந்தோம்

என்ன செய்வது..?
கூழ் முட்டையின் ஓட்டில்
ஓவியத்தை வரைந்தோம்
தவறு எம் மேல்த்தான்
இப்போது உடைந்துவிட்டது
சகிக்க முடியவில்லை
நாறுகிறது.

கைகள், கால்கள்,
தொட்டஇடம்,பட்டஇடம் எல்லாமே
நாறுகிறது.

[சுவடுகள், கார்த்திகை, 1989]

# ஈரமற்ற இரைச்சல்

பறி நிரப்பி வரும் படகை
வழிமறிக்கும் மணற்பரப்பு
பறித்துச் செல்லும் விதிநொந்து
கரையினில் கந்தல்கள்

தூரத்தெழும் அலைகளினை
தூங்காமல் விழிகள் நோக்கும்.
பொத்திக் கட்டிய அத்தாங்கும் வலைகளும்
ஈரத்தைக் காணமல்
தாழ்வாரத்தில் விழித்திருக்கும்.

நீட்டி நிமிர்ந்து
கரையினில் படுத்திருக்கும்
பாய்மரத்தின் தேகமெல்லாம்
வெய்யிலில் வெடித்திருக்கும்.

பலநாட்கள் தூக்கப்படாத
நங்கூரப் பிடியினில்
அலவாக் கரையினில்
அசைந்திருக்கும் சிறுதோணி.

ஊரிக்குவியலை
கூறுபோடும் சிறுகரங்கள்
உப்புக் காற்றை
குடித்துப் பசிமறக்கும்.

மலட்டுத் தென்னைகள்
மண்டியிட்டு உடல்சாயும்
குருத்துப் பிளந்து
குதப்பித்தீரும் பாதிப்பசி.

மீதிப்பசியை
மடியில் சுமந்து

உவர் மணற்தரையினில்
உறங்கும் மனிதம்.

இரவின் அலைகளின்
இரைச்சல் மிதித்து
இந்துசமுத்திரத்தை தாண்டிய பேய்கள்
'மண்டாப்' பற்களுடன்
மனிதத்தைத் தின்னவரும்.

வெறுங்குடல் மனிதம்-
பேய்களின்
பெருங்குடல் வழியே
ஜீரணமாகும்.

சந்தடியற்று விடியும்.
எதுவுமே நிகழாததுபோல்
சலனமற்று அசையும்
சந்ததி காக்கும் அலைகள்.

[சுவடுகள் , ஆனி, 1990]

# மரணவரம்

பொன்போர்த்த வர்ணத்தில்
உயிர்நீத்த இலைகளெலாம்
தாய்மரத்தின் காலடியில்
சரணாகதி குவிய,
எல்லாம் இழந்த மரம்
துளிர்ப்பே னினியோவென
வானத்தை அண்ணார்ந்து
வரம் வேண்டும் வேளையிலே
முகில் குவிந்து,
அணிதிரண்டு,
மூச்சுவிடப் புயலாகி;
கடல் கொதித்துக்
கரைபுரண்டு
வரம் கேட்ட மரம் சாய்ந்து
தன் சருகுட் தான்புதையும்
வரமீந்த வானிப்போ
என்ன நேர்ந்ததென
பூமியைக் கேட்டால்....?

[சுவடுகள், பங்குனி, சித்திரை 1992]

# எழுந்துவரும் எமதுகாலம்

கரைவந்த பேரலை
கடலுள் மீளவும்
மரம் மொய்த்த இலைகளும்
சருகாய் காற்றினில்.
குவிந்தகரு முகில்களும்
மழையாய் கடலினில்.

தூற்றிய பதரோ
காற்றில் மிதக்க,
குவிந்த அரிசியோ
மறைந்து போனது.

விடியும் என்று காத்துக் கிடக்க,
வெளிச்சங் கொஞ்சம் மட்டும்வந்தது.
சூரியன் எங்கே என்று தேட
பெருமுகிலொன்று கையை விரித்தது.

சோற்றுப் பானை அழுதுவடிய
தண்ணீர் குடமும் வற்றிப் போனது.
யௌவனம் பாடும் புலவர் படைக்கு
பசித்த மனிதன் கருவா யானான்

பாடிப் பாடிப் புலவர் களைக்க
பசித்த மனிதன் மடிந்து போனான்.
சவத்தை நீட்டி நிமிர்த்திக் கிடத்தி
புதிய மரணக் கவிதை நூறு.

சென்ற அலைகள் மீள வருக
உதிர்ந்த இலைகள் துளிர்த்தே எழுக
மழைநீர் பூமி நனைக்கப் பொழிக
பெருமுகில் விலத்திச் சூரியன் எழுக.

அழுது வடிந்த சோற்றுப் பானை
சிரிக்குங்காலம் எமக்கே சொந்தம்
எமது பசியை விலையாய் பேசும்
கள்ளப் புலவார் ஓடி மறைக.

நிலத்தை உழுது விதைத்தவர் நாங்கள்
அறுவடை செய்ய உமக்கேதுரிமை?
வரப்பை விட்டு வெளியே போங்கள்
எங்கள் பூமி எமக்கே சொந்தம்.

## விதைப்பு

பூமியிலிறங்கி
துளிப்புல்லை பனிமேயும்
ஓர் காலையில் நான் இறந்தேன்.
நான் இறந்தேன்.
எப்படியோ இறந்துபோனேன்.

என் முகத்தில் விழிக்காமல்
முகிலுள்
முகம் மறைத்த சூரியன்
முகம் காட்டாமலேயே
கடலுள் புதைந்துபோனான்

அவன் புதையும்போதே
என்னையும்
அவர்கள் புதைத்தனர்

அவர்களென்னைப் புதைத்துவிட்டு
எனது
சமாதியின் தலைமாட்டில்

ஏ. கேயை நாட்டி
அதன் தலையில்
இரும்புத்தொப்பியைக் கவிழ்த்து
இன்னொரு தேசத்தின்
'சல்யூட்' அடித்தனர்.
பின்பு
சபதமெடுத்துக்கொண்டனர்.

"உன்னைப் புதைக்கவில்லைத் தோழனே
விதைத்துவிட்டோம்" என்றனர்.

அவர்கள்
என்னை விதைத்தவிடத்தில்
விளைந்ததெல்லாம்
எருக்கு, கள்ளி, இன்னும்
ஏதோவெல்லாம்.

என்னை
விதைத்துவிட்டுப் போனவர்களோ

மீண்டும் வரவில்லை.

வரவேயில்லை.

நேற்று

பனியுலரா நேரத்தில்

பனம்பாத்திபோல் எழுந்த

புதிய சமாதி

இரகசியமாய்ச் சொன்னது

"அவர்கள் ஒருவரையொருவர்

விதைத்துக் கொண்டனர்" என்று

# ஒருதுண்டுப் பாணும் நானும்.

எனக்காக அரிபட்டு
அறுந்து துண்டாகி
நேற்றைய கறியால்
சாயம் பூசிக் கொண்ட
ஒருதுண்டுப் பழையபாண்.

பசியின் கெடுவில்
வயிற்றில் விழுந்த
சற்று நேரத்தின் பின்
சமா வைக்கும்
மேளதாளங்களோடு.

வெளிநாடு, வெளிநாடு
கனவுகளும்
அறுந்து துண்டுதுண்டாய்
சீரழிந்து ஓடுகிறது.

சவர்காரக் கணங்களால்
இடுப்புடைந்து
படுக்கையில் வீழ்ந்தால்
கெட்ட கனவுகள்
தூக்கத்தோடு சமர் புரிந்து
வெற்றிவாகை சூடும்.

சோர்ந்த உடல் சுமந்து
மீண்டும்
சவர்காரக் கணங்களுக்குள்
உடைந்து நொறுங்கும்
கனவுகளைப் போல்

கட்டக் கட்ட உடைக்கப்படும்
இரண்டாங் குறுக்குத் தெரு வீடு.
இடிபாடுகளிடையேயும்
புதைந்தன சில கனவுகள்

களைப்பு, இடுப்புடைவு
ஆனாலும்
துண்டுப் பாணோடு போரிட்டு
இடிந்த வீடு மீண்டும் எழும்பும்.
இது
பிரதான கனவு.

# எங்கடை மரம்.

எங்கடை முச்சந்தி
வடக்காலை ஆலமரம்

விரிஞ்ச தலை,
நிறையக் கிளை.
பருத்த மரம்
சரியான மொத்தம்
பத்துப்பேர் வேணும்
கட்டிப் புடிக்க

ஆணிவேர் கண்டு
விழுதுகள் அடங்கலும்
ஆறேழு தலமுறையா
எங்கடை கதைதான்.

இலைகள்,
இலைகளின்ர நரம்புகள்,
காம்புகள்
எல்லாங் கூட
எங்கடை கதைதான்
வேரோடி இருக்கும்.

எல்லாக் கதையளும்
தனக்குள்ள புதச்சு
தலைய அசைக்கும்
பைத்தியம் போல.
நெடுகலுமில்ல; அப்பப்போ.

இப்ப கொஞ்ச நாள்
பட்ட கொங்கைகள்
முறிஞ்சு விழுகுது.
அடிக்கடி விழும்.

கச்சான் கிழவி
விறகுக்கெண்டு
முந்தியெல்லாம்
கொண்டு போகும்

புகையுதெண்டு
கிழவி இப்ப
எடுக்கிறதில்ல

புகையுந்தானே.
தலைமுற வழியா
எங்கட கதையள
கண்டு கேட்டு
நொந்த மரம்;
தனக்குள்ள புகைஞ்சு
புகையின்ர சுருளை
கிளைகளுக் கூதி
கொப்பை உடைச்சால்
புகையுந்தானே?

பாவம் மரம்.
முந்தி;
பாவம் என்ன
செய்ததோ தெரியா
எங்கட கதையளக்
கேட்டு நொந்து
வருந்தி வருந்தி
அழுந்திச் சாக?

# தென்றலாயிருப்பினும்

அசைவன அசையட்டும்
ஆடுவன ஆடட்டும்
ஊர்வன ஊரட்டும்
இப்போதைக்கு என்னை
விட்டுவிடு.

காற்றில் அசையும் பூக்களையும்,
அலையில் ஆடும்
வெண்நுரைக் குமிழ்களையும்,
சிறைப்படாமல் ஊருகின்ற
சின்னத் தென்றலையும்
இப்போ என்னால்
ரசிக்க முடியாது.

பூங்காற்றும்
சுடும்வேளை இது
பூக்களை எப்படி
என்னால் ரசிக்க முடியும்?

பட்டினி அலையில்
அலைக்கழியும் வயிற்றோடு
அலையின் எச்சங்களை
நான்,
எங்கனம் ரசிப்பேன்?

எனது பசியை
முதலில்
தீர்க்க முடியுமா உன்னால்?
இல்லை:

எனது தாகத்தையாவது
போக்க முடியுமா பார்?
பசி, தாகம்
இவைகள்
இவைகளாகவேயிருக்க
இயற்கையை ரசிக்க
எப்படி முடியுமென்னால்?

எனது பசி, தாகம் தீரட்டும்
அதன் பின்பு வா.
இயற்கையின் வதனங்களை
நிறையவே ரசிப்போம்.
சாவகாசமாய் உட்கார்ந்தே
பேசுவோம், எழுதுவோம்.

வேண்டுமானால்
இப்போ எனது
தீயிலும் வேகாத
தீய துயரங்கள் தீரும் வழியை
பேசுவோம்......

பட்டினி உலையில் கொதிக்கும்
என் குழந்தைகளின்
பசி வயிற்றை
சிறிது சிந்திப்போமே....

போ.... போ....
நீ
ஜீரணமாவதற்காக
தென்றலைப் பருகுவேன்,
தென்றலாயிருப்பினும்
காற்றைக் குடித்து - என்
தாகம் தணியாது, பசியும் தீராது
போ போ....

ஓசை, சித்திரை–ஆனி, 1990

# நம்பிக்கை

நேற்றிழந்த சூரியனை
மேற்திசையிற் தேடினோம்
நெற்றியிலே வியர்வைகளும்
வற்றித்தான் போயின

இலையுதிர்ந்த மரங்களெல்லாம்
இனிப் பூக்கும் என்று
கீழ்த் திசையிற் பூத்துவரும்
கீறல்கள் புகலின

இழக்காத நம்பிக்கையும்
இறக்காத உணர்வுகளும்
இதிற்தானோவென்று
இருக்கின்றோம் காத்து.

# நியாயாதிபதிகள்

தேகம் நொருங்கி
இரத்தம் கசிந்து
ஆவிபிரியும் தருணத்தில்
"அவர்களிலொருவன்" காதோரம் சொன்னான்
"இருந்தாலும் உனது மரணம்
அநியாயமானது" என்று

ஆயினும்
உயிர் தொலைத்த உடலையும்
வதைத்து மகிழ்வுற்றனர்.
நான் செத்துப்போனேன்.
அநியாயமாய்த்தான் செத்தேன்.

உடைந்து உதிர்ந்ததுபோக
எஞ்சிய குண்டுச்சுவர்கள்
நியாயப்படுத்தின
எனது மரணம் சரியென்று.

வாழ்க ஈழப் பெருஞ்சுவர்கள்!

# நம்பிக்கை மீதான நம்பிக்கையில்...

இடைவிடாத பயணம்.
இன்றுவரை
வெட்ட வெளியில்.
அடிவானின் கீழ்
அமிழ்ந்திக் கிடக்கும்
எனது கிராமம்
இன்னும்
மேலெழுவில்லை
நம்பிக்கையும் தேயவில்லை
களைத்துப் போன கால்களுக்கு
ஆறுதல் கூறி
பயணம் தொடர்கிறது.

விழிகள் கூர்மையடையும்
வெளிகளுக்கப்பால்,
எங்கேயாவது

ஓர்
பனையின் தலைதானும்
புலப்படாதாஎன்று.
இதுவரை இல்லை.

இருட்டுக் கூடையுள்
பாம்பெனப் பூமி
மகுடி வாசித்த
பொழுதும் போனது.

பயம்
கவ்விக் கொள்ள முயற்சித்து
பின் தொடரும்.
விரட்டியபடி இன்று வரை.
நம்பிக்கை; நம்பிக்கை;

நம்பிக்கை மீது நம்பிக்கை வைத்து
நடை நீட்டி
பயணம் விரிகிறது.

எனது கிராமம்
எனது கிராமத்தில்,
எனது தோட்ட விரிப்பில்,
தென்னங்கால்கள் புதைந்த
தெளிந்த மணல் மேனியில்
எனது கால்கள்
தரிப்புக் காணும்வரை
பயணம் நீளும்.
நம்பிக்கை மீது கொண்ட
நம்பிக்கையோடு.

# அறிவித்தல்

மரணத்திற்கப்பால்
மோட்ச,நரகம் உண்டாம்.
அது கிடக்கட்டும்
எமது நிலம்
எப்போது மரணித்தது
நரகத்தில் துவண்டுபோக?

தண்டனைக்குரிய
பாவாத்மாக்கள்
எல்லா மக்களுமா?

யமதர்ம பதவிக்கு
நீங்கள்
எல்லோரும் போட்டியிட
எங்களது மரணம்தானா
வாக்குச் சீட்டுக்கள்?

கந்தக உலையில்
மனிதச் சோறு சமைக்கும்
எல்லா யமர்களுக்கும்
சமமாய் கொலையுரிமை
வழங்கிய வள்ளல் யார்?

பாசக் கயிறின்றி
எனது கேள்விகளுக்கு
விடைசொல்ல வந்தால்
எந்த யமரையும்
சந்திக்க தயாராவேன்.

## வேவு

காய்ந்து கலகலத்த
வேலியோரச் சருகிடையுள்
பூச்சி, பூரான் சரசரப்பும்
யமன் கனைப்பாய் நடுங்கவைக்கும்.

மரணம் திரிகிறது,
மரணம் திரிகிறது.

கடைவாயால் நுரைதள்ள
வேட்டைநா யுருவெடுத்து
கடைக்கோடித் தெருபிறந்து
கட்டுப் படலைவரை
மரணம் திரிகிறது.

வீட்டுமுந் தானைக்குள்
சாவுகவ்வா மனிதமொன்று
உயிர்சுமந்து மூலைக்குள்
பாரமுயி ரெனவிருக்க,
குழைதொலைத்த மாதுளையோ
முற்றத்திற் கொப்பசைத்து
இருட்காற்றில் நடுநடுக்கம்.

குழியுட் புதைந்ததிரு
விழிகள் இமைமூடா-
- தெரிதல் சுமந்தபடி
மெலிந்தமா துளைமறைவில்
உடல்மறைத்து இருள்வேவ
தெருவெல்லாம் படர்ந்திருக்கும்.

வேலியோரச் சருகனைந்துஞ்
சத்தமில்லா தூர்ந்துவரக்
கற்றதந்த மரணங்களாம்.

இருளவளை விழுங்கிநிற்க
அவள்விழிகள் இருள்விழுங்கி
மைந்தனுயிர் காப்பதற்காய்
மறைந்துவேவில் விழித்திருப்பாள்.

[சுவடுகள், பங்குனி, சித்திரை 1992]

# ஒருபாடல்..

கரைதனி லாடும் இலைகளி னோரம்
தென்றலும் மெல்ல இசைபாடும்
கரைதனில் மேவும் அலைகளினீரம்
கவிதைகள் கீறும் மனவோரம்

மலைமுக டோரம் கருமுகில் மேவும்
பாதையி னோரம் பனி தூவும்
மலரிதழ் மேலே தேனிகளுரும்
மணங்கமழ் பூவும் தேன் தூவும்

ஒரு மறு மனமந்தக் கரைதனிலே
தனிமையிற் துயருறும் நிலையினிலே
இயற்கையின் வதனமும் சுடுகிறதே
இருப்பதும் சுமையெனக் கனக்கிறதே.

இருவிழி கரைதனில் நீர்க்கோடு
தூசெனக் காற்றினில் மனக்கோடு
கோடுகள் சேர்ந்தொரு கோலமென
காலத்தில் வந்துகை சேராதோ?

[சுமைகள், ஆடி, ஆவணி, 1992]

## காயங்கள்

கிழக்கை சிவக்க வைத்தோம்.
இருளின் ஆள்கையில்
இரத்தத்தால்.

ஓ.... பிதாவே!
பிதாவுக்கும் பிதாவே!
இரட்சணியத்தின் உறைவிடமே
ஐம்பத்து மூன்று மணிகளை உருட்டி
உமது
ஜெபவேளை முடியுமுன்பே
பள்ளியிலிருந்த ஆபேல்களின்
தொழுகைக் குரல்கள்
பரலோகம் நோக்கி
உமது செவிகளை
கூக்குரல்களாய் எட்டிடச் செய்தோம்.

என் பிதாவே!
ஆபேலின் குடும்பத்தினரையும்
முலை சூப்பிய பச்சைக்குழந்தை உட்பட
உமது திருப்பாதங்களில்
பலியிட்டோம்.

குல்லாத் தலைகள் சீவி
மொட்டைபறிந்த வாட்களை
அடுத்த வேட்டையின்
கட்டளை பிறக்குமுன்
தீட்டித் தருக ஆண்டவரே, ஆள்பவரே.

துப்பாக்கி பீரங்கிகளாலும்,
கத்தி, வாள், பொல்லு, தீயாலும்
மானுடத்தைச் சாகடித்தல்
சலித்துப் போயிற்று.

மானுடத்தின்
முகத்தைப் பிராண்டி
குரல்வளையின் முடிச்சை
கடித்துத் தின்று
வயிற்றை
பற்களால் கிழித்துக் குடலெடுத்து
ஈரலையும் உண்பதற்கு
நாயாகவே உமது
அனுமதி வேண்டுகிறோம்.
அதுவும் இப்பொழுதே.

இருட்டில் சிவந்து கிடக்கும்
கிழக்கிலேயே
ஆரம்பித்துவிட அனுமதி வேண்டும்.

அமீன், அக்பர்
நௌபியா, ஜெரினாவிலிருந்தே
தொடங்கி விடுகிறோம்.

சலித்துப் போயிற்று ஆண்டவரே
சலித்துப் போயிற்று.
மானுடத்தை
ஆயுதங்களால் சாகடித்தல்
சலித்தே போயிற்று.
கட்டளையிடுங்கள் தந்தையே
காத்திருக்கிறோம் பணிமுடிக்க.

# இன்னொரு பாடல்

பூபாள நேரத்தில் ஒரு பாடல்- பூங்
காற்றோடு எனை வந்து தீண்டிடுதே
காற்றிலந்த கவிதைகளை கரைத்தவன் யாரோடி
கரையின்வெண் மணலில், கவிதைகள் விதைத்து
நடந்தது யாரோடி?

பாறையின் மேனியில் மோதிடு மலையிற்தன்
சோகங்கள் கரைத்தானோ...?
அந்தச் சோகங்கள் எந்தத்
தீயிலும் வேகா தென்றவன் நடந்தானோ
நடந்தவன் சுவடுகள் கரையிற் கண்டேன்- அந்தச்
சுவடுகள் பற்றி நான் தொடர்வேன்
யாரவன் கூறடி தோழியென்றேன்- அவன்
மனுவெனக் கூறி நீயகன்றாய்
நான் தொடர்வேன்.. அவன்
சுவடுகள்பற்றி நான் தொடர்வேன்..

பூமியின் மடிதனில் ஓடிடும் அருவியில்- வெண்
மேகங்கள் கரைந்தனவோ
அந்த மேகங்கள் எந்தச்
சாபங்களோடு சோகங்க ளானதுவோ
மிதந்தது மூங்கிற் குழல் அலையில்- அந்தக்
குழலும் துயரம் பாடுவதேன்
யாரவன் கூறடி தோழியென்றேன்-அவன்
மனுவெனக் கூறி நீயகன்றாய்
நான் தொடர்வேன்... அவன்
சுவடுகள் பற்றி நான் தொடர்வேன்..

## கவிதை

விளங்காமல் இருப்பவைகளை
தலைமேற் கொண்டனர்
கொண்டாடினர்

ஆகாகா அருமை
அருமையிலும் அருமை.

சனங்களுக்கு
விளங்கும்படி நீ சொல்கிறாய்
விளங்கச் சொன்னால்
அவை
வழங்காதவற்றின் வக்கப்படும்.

வார்த்தைகளுக்கு வார்த்தைகள்
தொடர்புகளை அறுத்துவிடு
சம்பந்தமற்றவற்றை
தொக்கலாக்கிச் சொல்
அவைதான் அருமை.

நீ போ....
என்னைவிட்டு

இன்னுங்கொஞ்சம் தள்ளிப்போ
சிலம்பமாட எனக்குத்தெரியாது.
என்ர ஆச்சி
என்ர அப்பு
என்ர சனங்களுக்கு
நான் சொல்லுறது விளங்கும்.

என்ர குஞ்சியப்பு
நான் சொன்னதுகளை
மெட்டுக்கட்டிப் பாடுறார்
என்ர அம்மான்
பிற்பாட்டிழுக்கிறார்
என்ர சனங்கள்
ரசிச்சு முனுமுனுக்குதுகள்
அழுதுகள், கோபப்படுதுகள்
சிரிக்குதுகள், யோசிக்குதுகள்
நான் சொல்லுறது
அதுகளுக்கு விளங்கும்
அது போதும்
நீ போ....
என்னைவிட்டு
இன்னும்கொஞ்சம் தள்ளிப்போ

சூழவும் வேலிகள்
வேலிகளுக்கப்பால் மதில்கள்
அதற்குள்ளேயே
அவர்களோடு நீயும்
மூச்சுத்திணறிச் செத்துப்போ.

காற்றாய்,
காற்றோடு காற்றாய்
சுதந்திரமாய்
எனது சொற்கள் திரியும்.

என்ர ஆச்சி
என்ர அப்பு
என்ர சனங்களுக்கு
நான் சொல்லுறது விளங்குது.

# மீள வேண்டும்

இரையுங்கடலின் அலையுங் கரையும்
கரையில் லீரக் கரும்பாறைகளும்
பாறைகாக்கும் ஒற்றைக் கொக்கும்
கொக்கின் பிடியிற் தப்பும் மீனும்
மீன்கள் நிரப்பி அசையும்படகும்
படகிற் கேட்கும் அம்பாக்குரலும்
குரலும்வானை உரசும் கூத்தும்
கூத்து முடிந்த கொட்டகைத் தரையும்
கொட்டகைத் தரையில் உதிர்ந்த மணியும்
மணிகள் தேடும் சிறுவர் படையும்
படையாய்த் திரளும் முள்ளிக் கொடியும்
கொடியில் லுலருஞ் சிறகு வலையும்
வலையிற்சரியுஞ் சுங்கன் கிளையும்
கிளைமுள் சிலிர்த்த கிழாச்சி மரமும்
கிழாச்சி மரமும் கண்ணாத்தீவும்
தீவுகள் ஏழு சூழ்ந்த என் கரையும்
கரையில் லோலைக்குடிசை நிரையும்
நிரையாய்ச் சடைத்த ஈச்சை மரமும்
ஈச்சை மரத்தில் பழுத்த குலையும்
குலைகள் தொங்கும் தென்னங்காடும்
காட்டில் மணக்கும் நொச்சிப் பூவும்
பூக்கள் சிரிக்கும் முசுட்டைக் கொடியும்
கொடிகள் படர்ந்த கள்ளி மரமும்
மரங்கள் நட்ட பாட்டன் நினைவும்
பாட்டன் நினைவாய்ப் பருத்த புளியும்
பருத்த புளியின் பரம்பரைக் கதையும்
கதைகள் சொன்ன ஆச்சி முகமும்
முகத்தில் உப்பு படிந்த சனமும்
சனங்கள் வளர்த்த நெய்தற்கலையும்
கலைகள் திரிந்த நரையான் தீவும்
நரையான் தீவின் வீழி ஒதுக்கும்
வீழி ஒதுக்கின் வெள்ளை மணலும்

மணலை அரிக்குங் கிழக்குக் கடலும்
கிழக்குக் கடலில் உதிக்கும் பொழுதும்
பொழுது புதையும் மேற்குப் பனையும்
பனையின் தலையில் நுங்குக் குலையும்
குலைகள் ளிறக்கும் இருட்டுக் கதையும்
இன்னும் இன்னும்...
என்னைப் பிரிந்த எனது தேச
வனப்பும், வனப்பின் எழிலுஞ் சிறப்பும்
காதல்கொண்ட கடலும் கரையும்
எல்லாம் எனக்கு மீள வேண்டும்.
பார்க்க ரசிக்க, பேச, எழுத
சுதந்திர மனுவாய் இவற்றைச் செய்ய
மீண்டும் எனக்கு வேண்டும் இவைகள்
யாரிடம் சென்று விண்ணப்பம் செய்வேன்!
பனிமலைச் சுவரில் பட்டியல் எழுதி
பனிமுகிலிடமா முறையிட்டழுவேன்?

# சூரியனைத் தின்றவர்கள்

சூரியனைப் பிய்த்து
தம் சீடர்களுக்கு அதை அளித்து
அவர் கூறியதாவது :
அனைவரும்
இதனை வாங்கித் தின்னுங்கள்
இது
உங்களுக்காக கையளிக்கப்படும்
என் அதிகாரங்கள்
இதனை உட் கொள்ளும் நிமித்தம்.
ஒளியின் மீதான ஆட்சியையும்
இருளின் மீதான ஆதிக்கத்தையும்
நீங்கள் அடைகிறீர்கள்

எனது ராஜ்ய பரிபாலனத்தின்
திறவு கோல்களை
உங்கள்
இடுப்பிலும் தோளிலுமாகச்
சுமத்துகிறேன்.

அவர்கள் எலும்புக் கூடுகளின் மேல்
உங்கள் இருப்பும்,
உங்கள் அனைவரின்
எலும்புக் கூடுகளின் மேல்
எனது இருப்பும்
எனதேயான சித்தம்

ஒன்றை மட்டும்
நானுங்களுக்குச் சொல்கிறேன்.
ஆயுதங்களின் மீதான
நம்பிக்கையையும்,
அராஜகங்களின் மீதான விசுவாசத்தையும்
வலுப்படுத்துங்கள்

ஏனெனில் தண்டிக்கும் அதிகாரம் மட்டுமேயன்றி
மன்னிக்கும் அதிகாரம்
உங்களுக்கு வழங்கப்படவில்லை

எவனொருவனை நீங்கள்
மரணத்திற்கு தீர்வையிடுகிறீர்களோ
அவனது மரணம்
எனது நித்திய அரசின் ஓர்
செங்கல்லுக்குச் சமானமாகும்

நீங்கள் ஒவ்வொருவரும்
சுடு குழலின் மீது
பிரமாணிக்கமாயிருங்கள்

உங்கள்
தூக்கத்தின் துணையாக
துப்பாக்கிகளே
என்றென்றும் இருக்கக் கடவதாக!
துப்பாக்கியை இழக்கும்
எவனொருவனும்
எனது
மந்தைகளை மேய்க்கத்
திராணியற்றவனாவான்

இயற்கை மரணம்
உங்களை அணுகாதபடிக்கு
செய்ய வேண்டியது
எனது
பேரரசின் கடமை என்பதை மறவாதீர்

பூமி எங்கும்
வானத்து மீன்களைப் போலவும்,
கடற்கரை மணலைப் போலவும்
மானுடத்தின் பிணங்களை
பல்கிப் பெருகச் செய்யுங்கள்

எனது அரசின் வரலாறு
மனிதக் குருதியால்
எழுதப்படும் என்ற
தீர்க்கதரிசிகளின் வாக்கு
நிறைவேறக் கடவதாக !

— சரிநிகர் — மார்கழி, 1990

# சூரியனைத் தின்றவர்கள்

விமர்சக்குக்கு

